International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சிலப்பதிகாரத்தில் யாழ்

**சோ. வெண்ணிலா**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் நா. மாலதி**
உதவிப் பேராசிரியர், நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கியங்களில் ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையான சிலப்பதிகாரத்தில் இயல், இசை, நாடகம் முத்தமிழ் கருவூலமாக திகழ்கிறது. பண்டைய துறைமுக நகரமான காவேரிப்பூம்பட்டினம் முன்னோடியான துறைமுக நகரமாகத் திகழ்ந்தது. இத்தைகைய சிறப்பு வாய்ந்த நகரத்தில் பண்டைய தமிழர்கள் பயன்படுத்திய இசைக்கருவிகளில் ஒன்றான யாழ் இசை கருவியின் வகைகள் அதன் சிறப்புகளை சிலம்பத்தின் அதன் முக்கியத்துவத்தை யாழ் கருவியின் சிறப்பை வெளிக்கொணர்வதை இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முதன்மைச் சொற்கள்:** யாழ், சிலம்பு, மாதவி, ஆடல்

**முன்னுரை**

தமிழர்களின் வாழ்வில் இசை என்பது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பகுதிகளையும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளார். இலக்கியத்தில் இசை என்பது உயிரோட்டத்தை ஒத்தது ஆகும். மனிதன் வாழ உயிர் எவ்வாறு முக்கியமானதோ, அதே போல் தமிழ் இலக்கியங்களில் இசையும் முக்கியம் ஆகும்.

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் நல்லதொரு கலைஞானம் கொண்டவர். அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார இசை மூலம் தமிழகத்தில் நிலவி வந்த பல்வேறு வகையான இசைக் கருவிகளை அறிந்துகொள்ள முடியும். இசையைப் பற்றி அடியார்க்கு நல்லார், "நரப்படை வாலுரைக்கப்பட்ட பதினாராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்றாகிய ஆதியிசைகளும்" என்று குறிப்பிடுகிறார். இசைக்கருவிகள் பல இருப்பினும் "யாழ்" சிலப்பதிகாரத்தில் பெற்ற இடத்தினை இக்கட்டுரையின் வழி அறியலாம்.

**யாழ் இசை**

யாழ் இசை என்பது பண்டைத் தமிழ் இசையில் பயன்படுத்தப்பட்ட ஒரு நரம்பு வாத்தியம். இது வீணையின் முன்னோடியாகும். யாழ் என்பது நரம்புகளால் கட்டப்பட்ட ஒரு கருவி. யாழ் இசை என்பது யாழின் மூலம் வெளிப்படுத்தப்படும் இசை ஆகும். யாழானது ஒரு வளைந்த கழுத்து மற்றும் ஒரு தொட்டி வடிவ ரெசனேட்டரைக் கொண்டக் கருவி. கழுத்தில் இருந்து ரெசனேட்டருக்கு நரம்புகள் கட்டப்பட்டிருக்கும். பல்வேறு வகையான

யாழ்கள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு வடிவங்கள் மற்றும் அளவுகளைக் கொண்டிருக்கும்.

**யாழின் வகைகள்**

சங்ககாலத்தில் இருந்தே வில் யாழ், பேரியாழ், சீறியாழ் போன்ற யாழ்கள் பயன் படுத்தப்பட்டன. காப்பியக் காலங்களில் மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டுயாழ் போன்ற யாழ்கள் பயன்படுத்தப்பட்டன. இவை தவிர, நாரதயாழ், கீசகயாழ், தும்புருயாழ், மருத்துவ யாழ் போன்றவையும் உள்ளன. இவற்றில் வில் யாழ், பேரி யாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டு யாழ் முக்கியமான யாழ்கள் ஆகும்.

**யாழ் உறுப்புகள்**

யாழ் பற்றி அறிந்து கொள்வதற்கு முன்பாக அதனின் உறுப்புகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். பொதுவாக எல்லா யாழ்களிலும் சில உறுப்புகள் இருத்தல் அவசியம்.

* பத்தல்
* கோடு ( அ) மருப்பு
* ஆணி
* வெண்கை
* நரம்பு
* பச்சை
* போர்வை
* திவவு

**சங்ககாலத்தில் யாழ்**

சங்க காலத்தில் பாணர், பொருநர் போன்றோர் யாழினை மீட்டி இசை எழுப்பியதாக ஆற்றுப்படை, எட்டுத்தொகை நூல்கள் குறிப்பிடுகின்றன. யாழினை இசைப்பதற்கு என்றே 'பாணர்' என்ற குழு இருந்ததை இலக்கியங்கள் வழி அறியலாம். யாழ், பாடிக்கொண்டே இசைக்கும் கருவியாக இருந்துள்ளது. சாதாரண மக்களிடம் புழக்கத்தில் இருந்த யாழ் ஒரு கால கட்டத்தில் தெய்வத்தன்மை பெற்று வணக்கத்திற்கு உரியதாக மாறியது. தமிழர்கள் யாழின் மூலம் இசைக்கே முதன்மை அளித்தனர். அதனாலயே ஒரு நரம்பில் தொடங்கி மூன்று, ஐந்து, ஏழு, ஆயிரம் நரம்புகள் கொண்ட யாழ் உருவாகியது எனலாம்.

சங்க இலக்கியமான பெரும்பாணாற்றுப்படை, பொருணராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம் போன்ற பத்துப்பாட்டு நூல்களில் யாழின் குறிப்புகள் இருப்பதை அறியலாம்.

பெரும்பாணாற்றுப்படையில் யாழின் முதல் இசைக்கருவியான 'வில் யாழ்' பற்றியக் குறிப்பு காணப்படுகிறது.

**"புறங்கோட்டு தொடுத்த மாற்புரி நரம்பின்**

**வில்யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்**

**பல்காற் பறவை கிளைசைத்தோர்க்கும்"**

(பெரும்.81-83)

குமிழின் உட்பொய்யாகிய கொம்பத்திலே வளைத்துக் கட்டின மாற்புரி நரம்பினைக் கொண்ட வில் யாழில் குறிஞ்சிப்பண்ணை இசைக்க வண்டுகள் கேட்கும் செய்தி கொடுக்கப்பட்டுள்ளது.

பட்டினப்பாலை நூலில் மகளிரின் வெறியாட்டத்தில் யாழ் இசைக்கும் செய்தியும் போரில் தோல்வியுற்ற நாட்டின் நிலையினை கூறுகையில் யாழ், முழவு போன்ற இசைக் கருவிகளின் ஒலி இல்லாமல் அச்சம் மட்டுமே காணப்படும் எனும் செய்தியில் யாழ் பற்றியக் குறிப்பு காணப்படுகிறது.

**குழலகவ யாழ் முரல**

**முழவதிர முரசியம்ப**

**விழவறா வியலாவனத்து** (பட்டின.156-158)

யாழிசைக் கேட்போர் இல்லையாயின் யாழிசையால் எந்த பயனும் இல்லை என்பதை,

**ஏழ் புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை**

**யாழுளே பிறப்பினும் அவைதான் என் செய்யும்**

என்று கலித்தொகை குறிப்பிடுவதை அறியலாம்.

**தொல்காப்பியத்தில் யாழ்:**

சங்க நூல்களுக்கு முன்பே தொல்காப்பியத் தில் யாழ் கருவி பற்றியக் குறிப்பு காணப் படுகிறது. தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர். யாழ் ஒரு, 'இசை இலக்கண நூல்' ஆகும். இந்நூலில் ஐந்து வகையான நிலங்களும், அந்நிலத்திற்குரிய இசைக் கருவிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவ்வாறு

குறிப்பிடும் பொழுது யாழ்க்கருவி பற்றியக் குறிப்பும் காணப்படுகிறது. இதனை “இசையொடு சிவணிய யாழ்” என்றும்,

**“தெய்வம் முணாவே மாமரம் புட்பறை**

**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**

**இவ்வகை பிறவும் கருவென மொழிப”**

என்ற வரிகளின் மூலம் யாழின் முக்கியத்து வத்தை அறிந்து கொள்ளலாம். ஐந்து நிலத்திற்கும் உரிய யாழ்க் கருவியாக, முறையே,

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | - | குறிஞ்சி யாழ் |
| முல்லை | - | முல்லை யாழ் |
| மருதம் | - | மருத யாழ் |
| நெய்தல் | - | விளரி யாழ் |
| பாலை | - | பாலை யாழ் |

என தொல்காப்பியம் தெளிவுபடுத்தவதை அறிந்து கொள்ள முடிகிறது.

**இலக்கியங்களில் யாழ்**

சங்க இலக்கியங்களில் யாழ் ஒரு முக்கிய இசைக்கருவியாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது தமிழர்களின் இசை மரபில் யாழ் வகித்த முக்கியத்துவத்தை காட்டுகிறது. வில்யாழ், பேரியாழ், சீறியாழ் போன்ற யாழின் வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சங்க காலத்துக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பே யாழ் தோன்றியிருக்கலாம் என்பர். 1947ஆம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் “யாழ் நூல்” என்னும் ‘இசைத்தமிழ் நூல்’எழுதியுள்ளார். அந்த நூலில் யாழைப் பற்றித் தெளிவான ஆய்வுகளைத் தொகுத்துள்ளார்.

**சிலம்பில் யாழின் வகைகள்**

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் நான்கு வகையான யாழினைக் குறிப்பிடுகிறார். அவை முறையே,

1. பேரி யாழ்
2. மகர யாழ்
3. சகோட யாழ்
4. செங்கோட்டு யாழ்

இந்த நான்கு வகையான யாழும் பெரும்பான்மையானவை என்றும், சில இடங்களில் சிறுபான்மையாக வருபவையும் உள்ளன.

சிலப்பதிகாரத்தில் யாழ் வாசிப்பது ஒரு கலையாகவும், இசைக் கலைஞர்களின் திறமையை வெளிப்படுத்தும் கருவியாகவும் காட்டப்பட்டுள்ளது. மாதவி யாழ் வாசிப்பதில் மிகவும் திறமை வாய்ந்தவளாக இருந்தாள். நரம்புகளை பரிசோதிப்பது, சுருதி கூட்டுவது போன்ற நுட்பங்களும் சிலப்பதிகாரத்தின் வழி அறிந்து கொள்ள முடியும்.

**சிலப்பதிகாரமும் யாழும்**

யாழ் மிக சிறந்த இசை கருவியாக இளங்கோவடிகள் காலத்தில் மதிக்கப் பட்டுள்ளது. குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதை, கானல்வரி போன்ற இரு காதைகளிலும் யாழ் பற்றி விரிவாக எடுத்தாண்டுள்ளார். மாதவி என்னும் நாட்டிய கலைஞரின் அரங்கேற்றுக்குப் பிறகு உறுதுணையாக இருந்தவர்களுள் யாழாசிரியனும் குறிப்பிடத் தகுந்தவர். மாதவியின் நடனம்,பாடல், அழகு ஆகிய மூன்றிலும் சிறந்து விளங்க அவருக்கு இசைக்கருவிகளை வாசிக்கப் பயிற்சி அளித்தவர் யாழாசிரியன் ஆவார். மாதவின் அரங்கேற்றத்திற்கு ஆடலாசான், இசையாசிரியன், இயற்றமிழ் புலவன், தண்ணும்மை முதல்வன், குழலோன் ஆகியோருடன் யாழாசிரியனும் உடன் இருந்தனர் என அரங்கேற்றுக்காதை வழி அறிந்து கொள்ளலாம்.

யாழ் இசையை மையமாக வைத்தே இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை கட்டமைத்துள்ளார் எனலாம், கோவலன், மாதவி இருவரும் சிலப்பதிகாரக் காப்பியத்தில் பாடிய யாழிசைப் பாடல்கள் பெரிய திருப்பத்தை உண்டாக்குகிறது.

முப்பெரும் உண்மைகளில் ஒன்றான, **“ஊழ்வினை உருத்து வந்தூட்டும்”** என்ற கருத்தை கானல் வரியில் விளக்குகிறார் இளங்கோவடிகள்.

**“யாழிசை மேல் வைத்து தன் ஊழ்வினை**

**வந்து உருத்தலாகலின்**

**உவவுற்ற திங்கள் முகத்தானைக்**

**கவவுக்கை நெகிழ்ந்தனனால்”**

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

மாதவியின் பிரிவுக்கு காரணம் மாதவி பாடிய யாழிசைப் பாடல்களே எனலாம். அவை முறையே,

**"சித்திரப்படத்துள் புக்குச் செழுங்கோட்டின் மலர்புனைந்து,**

**மைத்தடங்கண் மணமகளிர் கோலம் போல் வனப்பு எய்திப்,**

**பத்தரும் கோடும் ஆணியும் நரம்பும் என்று**

**இத்திறத்துக் குற்றம் நீங்கிய யாழ்கையில் தொழுதுவாங்கிப்"** (கானல் வரி 1-4)

என கானல் வரிப்பாடல்கள் யாழ் வருணனையுடன் தொடங்குகிறது.

சித்திரப் படங்கள் தீட்டிய ஆசையினுள் புகுந்து, அழகிய கோட்டிலே மலர் புனையப் பெற்று, மை தீற்றிய பெரிய கண்களை உடைய மணமகளின் ஒப்பனைக் கோலத்தைப் போல் புனைந்த அழகினை உடையதும், பத்தரும் கோடும் ஆணியும் நரம்பு என்ற உறுப்புகளிலே எவ்வித குற்றமும் இல்லாததும் என அந்த நல்ல யாழினை மாதவி தொழுது தன் கையிலே வாங்கினாள் என்ற செய்தியை அறிந்து கொள்ளலாம்.

கோவலனும், மாதவியும் சந்தித்து யாழை இசைத்து பாடப்போகும் கானல் வரியில் தொடக்க் காட்சி நாடகம் போல் அமைந்து உள்ளது. யாழின் இசைத் தொடர்பாக இளங்கோவடிகளுக்கு இருந்த இசை அறிவையும் அறிந்து கொள்ள முடிகிறது. யாழிசை மீட்டல் குறித்து அரும்பத உரைக்காரர் இசைத்தமிழ் பதினாறு படலத்தில் கரணவோத்திலிருந்து சில சூத்திரங்களை எடுத்துக்காட்டி இளங்கோவடி கள் விளக்கியுள்ளார்.

இளங்கோவடிகள் மாதவி இசைத்த யாழை **"செங்கோட்டின் யாழ்"** என்றும், இது மாடகம் என்னும் பகுதியை உடையது. மேலும் அதன் நரம்புகளை வலித்தும், மெலித்தும் சுருதி சேர்க்கும் ஆணிகளை உடையது. எனவே இந்த ஆணிகள், 'நரம்பு முறுக்கும் ஆணிகள்' எனலாம். நேர்கோட்டினையும் நரம்பு முறுக்காணிக ளைக் கொண்ட மாடகத்தையும் உடைய யாழினை 'செங்கோட்டி யாழ்' என்கிறார் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்.

## முடிவுரை

யாழைப் பற்றி பல ஆய்வுகள் இருப்பினும் சிலப்பதிகாரத்தில் யாழின் சிறப்பினையும், இளங்கோவடிகளின் கவித் திறத்தினையும் அறிந்து கொள்ள முடிகிறது. யாழின் சிறப்பே சிலம்பின் சிறப்புக்கும் ஒரு வகையில் காரணம் என்பதை அறியலாம். சிலப்பதிகாரத்தில் யாழ்பெற்ற இடத்தினைக் இக் கட்டுரை தெளிவாக எடுத்துரைக்கிறது எனலாம்.

## துணைநூற்பட்டியல்:

1. புலியூர் கேசிகன், *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்,* முதல் பதிப்பு, மார்ச் 2021, ஸ்ரீ பாரதி பப்ளிகேஷன்ஸ், மேற்கு மாம்பழம், சென்னை 33.
2. பேரா. முனைவர் பாக்கிய மேரி, *வெற்றி நோக்கில்… இலக்கணம், இலக்கிய வரலாறு மொழித்திறன்*, முதற்பதிப்பு, 2013, பூவேந்தன் பதிப்பகம், 10/2 சீனிவாச சாலை, மயிலாப்பூர், சென்னை 600004.
3. முனைவர் த. கனக சபை, *நாட்டுப்புற ஆட்ட கலைகள்: அன்றும் இன்றும்,* முதற்பதிப்பு, 2009, நிகழ்கலைத்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி 620024.
4. ஆறு. ராமநாதன், *தமிழர் கலை இலக்கிய மரபுகள்*, இரண்டாம் பதிப்பு, டிசம்பர் 2018, மெய்யப்பன் பதிப்பகம், 53 புதுத்தெரு, சிதம்பரம் 608001.
5. முனைவர் சு. பார்வதி, *சிலப்பதிகாரச் சிந்தனைகள்*, முதற்பதிப்பு, 31 டிசம்பர் 2009, மெய்யப்பன் பதிப்பகம், 53 புதுத்தெரு, சிதம்பரம், 608001.
6. விபுலானந்த அடிகள், *யாழ் நூல்*, யாதுமாகி பதிப்பகம், திருநெல்வேலி, 2003.
7. ஏ.என். பெருமாள், *தமிழர் இசை*, உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.
8. தவத்திரு சுத்தானந்த பாரதியார், *சிலம்புச் செல்வம்*, முதல் பதிப்பு, அக்டோபர் 1967, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், திருநெல்வேலி – 6.